# வருடாந்த செயல்நிறைவேற்று அறிக்கையும் கணக்குகளும்

# 2013

## தலைப்பு : 269

### மாவட்ட செயலகம்,

### மட்டக்களப்பு

# வருடாந்த செயல் நிறைவேற்று அறிக்கையும் கணக்குகளும் 2013

## உள்ளடக்கம்



| | | | விபரம் | பக்கம் |
|---|---|---|---|---|
| **01** | **முன்னுரை** | | | **01** |
| **02** | **அறிமுகம் - மாவட்ட செயலகம்** | | | **02** |
| | 2.1 | தூரநோக்கு | | **02** |
| | 2.2 | குறிக்கோள் | | **02** |
| | 2.3 | நோக்கம் | | **02** |
| | 2.4 | முக்கிய செயற்பாடுகள் | | **02** |
| **03** | **அறிமுகம் - மாவட்டம்** | | | **03** |
| | 3.1 | மாவட்ட நிருவாக வரைபடம் | | **03** |
| | 3.2 | மாவட்டத்தின் எல்லைகள் | | **03** |
| | 3.3 | மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் | | **04** |
| | 3.4 | மாவட்டத்தின் இயற்கை வளங்கள் | | **04** |
| | 3.5 | மாவட்ட மக்களின் வாழக்கைமுறை, பிரதான வரத்தக பொருளாதார செயற்பாடுகள் | | **05** |
| | 3.6 | மாவட்டத்தின் நீர்ப்பாசன முறைமை | | **05** |
| | 3.7 | மாவட்டத்தின் சனத்தொகை விபரம் | | **06** |
| | 3.8 | மாவட்டத்தின் காலநிலை | | **07** |
| | 3.9 | **மாவட்டத்தின் புள்ளிவிபரத் தகவல்கள்** | | **07** |
| | | • | பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் பிரிவுகள், கிராமங்கள் மற்றும் நிலப்பரப்பு | **07** |
| | | • | வாக்கெடுப்பு தொகுதிகள், உள்ளூராட்சி சபைகளும் அங்கத்தவர்களும், மாகாண சபை, பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தல் தொகுதிகள், வாக்கெடுப்பு மாவட்டங்கள், பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | **08** |
| | | • | பாடசாலைகள், ஆசிரியர்கள் விபரம் | **09** |
| | | • | அரச விடுதிகளின் விபரம் | **09** |
| **04** | **அமைப்பு மற்றும் ஆளணி** | | | **10** |
| | 4.1 | அமைப்பு வரைபடம் | | **10** |
| | 4.2 | 1 | அனுமதிக்கப்பட்ட ஆளணி – மாவட்ட செயலகம் | **10** |
| | | 2 | அனுமதிக்கப்பட்ட ஆளணி – பிரதேச செயலகங்கள் | **10** |

| | | | விபரம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| 05 | செயல்நிறைவேற்றுகை | | | | 11 |
| | 5.1 | | பொது நிருவாக செயற்பாட்டின் முன்னேற்றம் | | 11 |
| | | 1 | நிருவாக செயற்பாடுகள் | | 11 |
| | | 2 | கிராம உத்தியோகத்தர் செயற்பாடுகள் | | 12 |
| | | 3 | உள்ளக்கணக்காய்வு செயற்பாடுகள் | | 13 |
| | | 4 | வருமான சேகரிப்பு செயற்பாடுகள் | | 13 |
| | | 5 | மனிதவள அபிவிருத்தி ஆளுமை விருத்தி செயற்பாடுகள் | | 13 |
| | | 6 | தேர்தல் செயற்பாடுகள் | | 14 |
| | | 7 | திருமண, பிறப்பு, இறப்பு பதிவுகள் செயற்பாடுகள் | | 14 |
| | | 8 | காணிப்பதிவு செயற்பாடுகள் | | 14 |
| | | 9 | அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் | | 15 |
| | 5.2 | | சமூக சேவை மற்றும் கலாசார செயற்பாடுகள் | | 15 |
| | | 1 | கலாசார மற்றும் சமயம் சார் செயற்பாடுகள் | | 15 |
| | | 2 | சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகள் | | 15 |
| | | 3 | சமூக சேவை செயற்பாடுகள் | | 16 |
| | | 4 | மாவட்ட தொழில்சேவை நிலைய செயற்பாடுகள் | | 16 |
| | | 5 | விளையாட்டு சார் செயற்பாடுகள் | | 16 |
| | 5.3 | | அபிவிருத்தி செயற்பாட்டின் முன்னேற்றம் | | 17 |
| | | 1 | திவிநெகும வேலைத்திட்டம் | | 17 |
| | | 2 | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி | | 18 |
| | | 3 | பூரணப்படுத்தப்பட்டாத சொத்துக்கள் அபிவிருத்தி | | 19 |
| | | 4 | தயட்ட கிருள பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | | 20 |
| | 5.4 | | வருடாந்த கணக்குகள் | | 21 |
| | | 1 | செலவு விபரம் - மாவட்ட செயலகம் | | 21 |
| | | 2 | செலவு விபரம் - பிரதேச செயலகங்கள் | | 22 |
| | | 3 | செலவு விபரம் - ஏனைய திணைக்களங்கள் | | 23 |
| | | 4 | நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒதுக்கீட்டுக்கணக்கு | DGSA 2 | 24 |
| | | 5 | கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினங்கள் | DGSA 3 | 24 |
| | | 6,7 | கருத்திட்ட ரீதியான மூலதனச்செலவினம் 1,2 | DGSA 4 | 25 |
| | | 8 | செலவினத்தை நிதிப்படுத்தும் பொழிப்பு | DGSA 5 | 26 |
| | | 9 | முற்பண, வைப்புக்கணக்குகளின் கட்டுப்பாட்டு கணக்குகள் பற்றிய பொழிப்பு | குறிப்பு ii | 26 |
| | பின்னிணைப்புக்கள் | | | | |
| | 1 | அமைப்பு வரைபடம் | | | |
| | 2 | வருமான சேகரிப்பு விபரம் | | | |

# 01 முன்னுரை

2013 ஆம் வருடத்திற்கான மட்டக்களப்பு மாவட்டச்செயலகத்தின் செயல்நிறைவேற்று அறிக்கையினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் மத்தியில் வெருகல் ஆற்றை வடக்கு எல்லையாகவும் வங்காள விரிகுடாவை கிழக்கு எல்லையாகவும், துறைநீலாவணையை தெற்கு எல்லையாகவும் பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களை மேற்கு எல்லையாகவும் கொண்டு அமைந்துள்ளது.

இதன் புவிப்பரப்பு 2663.1 சதுர கிலோமீற்றர்களாகும். இந்த மாவட்டம் நிருவாக நோக்கங்களுக்காக பதினான்கு (14) பிரதேச செயலகப்பிரிவுகளை கொண்டுள்ளது.

402 ஆம் இலக்க 12.09.2002 திகதியிடப்பட்ட பொது நிதிச்சுற்றுநிருபத்திற்கு அமைவாக மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட்ட பிரதான செயற்பாடுகள், சேவை மற்றும் நிதித்தேர்ச்சியினை உள்ளடக்கியதாக இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் இம்மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு அளித்த பங்களிப்புக்காக மாவட்டத்தின் சகல உள்ளக திணைக்களத்தலைவர்கள் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ்,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்
மட்டக்களப்பு மாவட்டம்
2014.05.20

# 02 அறிமுகம் - மாவட்ட செயலகம்

## 2.1 தூரநோக்கு

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தினை சிறந்த பொதுச்சேவையின் ஊடாக மேம்படுத்தல்.

## 2.2 குறிக்கோள்

சிறந்த சேவையினை வழங்குவதனூடாகவும் பிரதேச மட்ட மற்றும் நிருவாக செயற்திறனூடாகவும், மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாழ்க்கை நிலையினை அதிகரித்தல்.

## 2.3 நோக்கம்

- செயற்பாடுகளை பிரதேச செயலாளர்களினூடாக ஒருங்கிணைத்தல்,
- நிருவாக மட்டங்களுக்கிடையில் தாமதமற்ற தொடர்பாடலினை உறுதிப்படுத்தல்,
- பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தல்
- தேர்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்,
- மாவட்ட செயற்பாட்டுச்சுட்டியில் மதிப்பிடப்பட்டுள்ளவாறான வினைத்திறனான வருமான சேகரிப்பு

## 2.4 முக்கிய செயற்பாடுகள்

1. வறுமையைக்குறைக்கும் செயற்பாடுகளின் விநியோகம் மற்றும் முகாமை செய்தல்
2. அனர்த்த நிவாரண மற்றும் புனர்வாழ்வுத்திட்டங்களை நிருவகித்தல்
3. அபிவிருத்தி திட்டங்களை திட்டமிடலும், மேற்பார்வை செய்தலும்
4. தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்தல்
5. மாவட்டத்தின் திட்டங்களின் நிருவாகமும் வழிநடத்தலும்
6. ஓய்வூதிய கொடுப்பனவினை மேற்கொள்ளல்
7. பிறப்பு, திருமண மற்றும் மரணப்பதிவு மேற்கொள்ளல்
8. தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்
9. காணியுடன் தொடர்பான பணிகள்
10. வருமான சேகரிப்பு
11. அனர்த்த நிவாரண செயற்பாடுகள்
12. மனிதவள அபிவிருத்தி செயற்பாடுகள்

# 03 அறிமுகம் - மாவட்டம்

## 3.1 மாவட்ட நிருவாக வரைபடம்




## 3.2 மாவட்டத்தின் எல்லைகள்

| | |
|---|---|
| வடக்கு | வெருகல் ஆறு - திருகோணமலை மாவட்டம் |
| கிழக்கு | வங்காள விரிகுடா |
| தெற்கு | அம்பாறை மாவட்டம் |
| மேற்கு | அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்கள் |

## 3.3 மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெயர் மட்டக்களப்பு நகரத்தின் பெயரைக்கொண்டு பெறப்பட்டதுடன், ஆரம்பத்திலிருந்து மட்டக்களப்பானது புளியந்தீவு எனும் பெயரில் காணப்பட்டது. மட்டக்களப்பு என்ற பெயர் மடுக்களப்பு என்ற பெயரிலிருந்து பெறப்பட்டுள்ளது.

இதன் விஸ்தீரண எல்லை கிழக்குக்கடற்கரையின் 130 கி.மீ. தெற்கிலுள்ள பெரிய கல்லாறு தொடக்கம் வடக்கில் வெருகல் ஆறு வரை பரந்து காணப்படுகின்றது.

மட்டக்களப்பைப்பற்றிய வைத்தியர் சீ.ஏ. கிரிகன் பக் சார்ஜன்ட் அவர்களின் கருத்துப்படி மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவானது கடலிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் கடலோடு இணையும் மத்திய பிரிவில் அமைந்துள்ளது. பிரதான நிலப்பரப்பிலிருந்து தெற்கு மற்றும் மேற்கு சிறிய நீர்ப்பரப்பால் இது பிரிக்கப்பட்டுள்ள ஒரு தீவு எனலாம். இந்நகரமானது மிகவும் முக்கியமானதும் பெரும்பாலான பகுதி சதுப்பு நிலமாகவும் காணப்படுகின்றது. மட்டக்களப்பு பல அடிகள் உயரத்திலும் 10 மைல்கள் வரையுள்ள அதிக வயற்காணிகளினாலும் சூழப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அவ்வேளையில் பிரபல்யமல்லாத சிறிய தீவுகளில் ஒன்றான “போன்” தீவில் அப்போதைய உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. போன் அவர்களுக்கு பங்களா ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

பழைய ஒல்லாந்தர் கோட்டைக்கு முன்பாக உள்ள களப்பின் கீழ்ப்பகுதியிலிருந்து பல்வேறு இனிமையான இசை ஒலி கேட்பதாகவும் இவ்வொலி காற்றில்லாத வேளைகளிலும் பௌர்ணமி நாட்களிலும் கேட்பதாகவும் நம்பப்படுகின்றது. இதன் காரணமாக மட்டக்களப்பு “மீன்பாடும் தேனாடு” என்று அழைக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு 1622 வருடத்தில் போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்டதுடன், 1639 இல் ஒல்லாந்தராலும் பின்னர் 1796 இல் ஆங்கிலேயராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

1870 வருடத்தில் மட்டக்களப்பானது பிரதான அரசாங்க அதிபர் அலுவலகமாக நிறுவப் பட்டதுடன், இது முன்னர் திருகோணமலையின் உப அலுவலகமாக காணப்பட்டது. மட்டக்களப்பின் முதல் அரசாங்க அதிபராக திரு. ஆர்.டபிள்யூ.ரி. மொரிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார் என தகவல்கள் கூறுகின்றன.

## 3.4 மாவட்டத்தின் இயற்கை வளங்கள்

- இது ஒரு கரையோர மாவட்டமாகக்காணப்படுகின்றமையால், கடல் வளம் பிரதான வளமாக காணப்படுகின்றது. 08 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதான 76 கிராம உத்தியோகத்த பிரிவுகள் கரையோரத்திலேயே காணப்படுவதுடன், இதன் நீளம் 119.43 கிலோ மீற்றர்களாகும். இவ்வலயத்தில் வதியும் மக்களின் முக்கிய ஜீவனோபாயங்களில் ஒன்றாக உவர் நீர் மின்பிடித்தொழில் காணப்படுகின்றது.
- அதேபோன்று மாவட்டத்தின் பெயருக்கே உரியவாறு கல்லாறு தொடக்கம் வாழைச்சேனை வரை உள்ளக நீரினை கொண்ட 229.19 சதுர கிலோமீற்றர் பரப்புடைய மிக நீண்ட களப்பு காணப்படுவதுடன், இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 8.70% வீதமாகும். களப்பினை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களில் நன்னீர் நீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோர் அதிகமாக காணப்படுகின்றனர்.
- புராதன காலத்தில் இது ஒரு துறைமுகப்பட்டணமாக காணப்பட்டுள்ளதுடன், இதன் போது பயன்படுத்தப்பட்ட பாரந்தூக்கும் இயந்திரங்கள் தற்போதும் காந்திப்பூங்கா வாவியோரமாக காணப்படுவதனை அவதானிக்க முடியும்.
- பாசிக்குடா கடற்கரை அலையற்ற பிரபல்யம் வாய்ந்த கடற்பகுதியாக காணப்படுவதுடன், இது இலங்கையில் காணப்படும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்த முக்கிய சுற்றுலாத்தளமாகவும் காணப்படுகின்றது.
- மாவட்டத்தின் பிரதான தொழில்களில் ஒன்றான நெற் பயிற்செய்கைக்கு உகந்த வண்டல் மண் தொகுதி மாவட்டத்தின் மேற்கு பகுதியில் காணப்படுகின்றது. இது மாவட்டத்தின் உணவு தன்னிறைவுக்கும், அரிசி உற்பத்தி செய்யும் பிரதான மாவட்டங்களில் ஒன்றாக திகழ்வதற்கும் ஏதுவாய் அமைந்துள்ளது.

## 3.5 மாவட்ட மக்களின் வாழ்க்கை முறை மற்றும் பிரதான வர்த்தக மற்றும் பொருளாதார செயற்பாடுகள்

- மாவட்ட மக்களின் பிரதான தொழில்களாக கமத்தொழில், விவசாயம், மீன்பிடி, வியாபாரம் போன்றன காணப்படுகின்றன.

## 3.6 மாவட்டத்தின் நீர்ப்பாசன முறைமை

- மாவட்டத்தில் இரு போகங்களில் நெற்பயிற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. பெரும்போக செய்கையானது மழைநீர் மூலம் நீரைப்பெற்றுக்கொள்வதுடன், சிறுபோக செய்கையின் போது மாவட்டத்தில் காணப்படும் பின்வரும் நீர்ப்பாசனக் குளங்கள் மூலம் நீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

- **பிரதான மற்றும் மத்தியதர நீர்ப்பாசனக்குளங்கள் - மட்டக்களப்பு மாவட்டம்**

| | திட்டத்தின் பெயர் | பிரதேச செயலகப் பிரிவு | நீர் வழங்கத் தக்க பரப்பளவு (ஏக்கர்) | கொள்ளளவு (கன அடி) | நீர்பாய்ச்சல் பரப்பு (சதுர மைல்கள்) |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரங்கேணிக் குளம் | கோறளைப்பற்று வடக்கு | 402 | 3,550 | 9.3 |
| 2 | கிரிமிச்சை ஓடைக்குளம் | | 250 | 2,050 | 5.85 |
| 3 | ஆனைசுட்ட கட்டுக்குளம் | | 310 | 1,500 | 4.3 |
| 4 | தரவைக் குளம் | கோறளைப்பற்று தெற்கு | 200 | 535 | 3.35 |
| 5 | நெடியகல்லுக் குளம் | | 500 | - | - |
| 6 | அடைச்சகல் குளம் | மண்முனை மேற்கு | 325 | 1,475 | 3.25 |
| 7 | புளுகுநாவ திட்டம் | மண்முனை தென்மேற்கு | 4,388 | 4,200 | 10.1 |
| 8 | கடுக்காமுனை திட்டம் | | 3,260 | 3,260 | 2.44 |
| 9 | செவனப்பத்துவ குளம் | | 300 | 525 | - |
| 10 | மகிழடித்தீவு குளம் | | 200 | 390 | - |
| 11 | பெரியகுளம் - மகிழூர் | மண்முனை தென் எருவில் பற்று | 350 | 600 | - |
| 12 | களுதாவளை பெரியகுளம் | | 350 | 1041 | - |
| 13 | பெரியகுளம் - பழுகாமம் | போரதீவுப்பற்று | 300 | 510 | - |
| 14 | பெரியகுளம் - பெரியபோரதீவு | | 340 | 580 | 0.7 |
| மூலம் : நீர்ப்பாசனத்திணைக்களம் - கிழக்கு மாகாணம் | | | | | |

- **பிரதான நீர்ப்பாசனக்குளங்கள் - மட்டக்களப்பு மாவட்டம்**

| திட்டத்தின் பெயர் | பிரதேச செயலகப் பிரிவு | நீர் வழங்கத் தக்க பரப்பளவு (ஏக்கர்) | கொள்ளளவு (கன அடி) | நீர்பாய்ச்சல் பரப்பு (சதுர மைல்கள்) |
|---|---|---|---|---|
| நவகிரி | போரதீவுப்பற்று | 17,505 | 53,500 | 70 |
| தும்பங்கேணி | போரதீவுப்பற்று | 679 | 1,194 | 1.5 |
| உன்னிச்சை | மண்முனை மேற்கு | 12,757 | 55,020 | 106 |
| உறுகாமம் | ஏறாவூர் பற்று | 9,752 | 18,600 | 356 |
| வெலிககண்டிய | ஏறாவூர் பற்று | 339 | 1,698 | 5.1 |
| கித்துல்வெவ | ஏறாவூர் பற்று | 800 | 4,205 | 10.95 |
| வாகனேரி | கோரளைப்பற்று, மேற்கு | 8,500 | 13,500 | 4.2 |
| புனானை | கோறளப்பற்று மேற்கு | 1,500 | - | - |
| வடமுனை | கோறளைப்பற்று மேற்கு | 378 | 378 | 7.8 |
| கட்டுமுறிவு | கோறளைப்பற்று வடக்கு | 850 | 850 | 25.5 |
| மூலம் : நீர்ப்பாசனத்திணைக்களம் - மத்திய அரசு | | | | |

## 3.7 மாவட்டத்தின் சனத்தொகை விபரம்

| தொ. இல | பிரதேச செயலக பிரிவு | மொத்த சனத் தொகை | குடும்பங் களின் எண். | இனரீதியாக சனத்தொகை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தமிழர் | முஸ்லீம் கள் | சிங் களவர் | பறங் கியர் | ஏனை யவர் |
| 1 | காத்தான்குடி | 48,874 | 13,344 | - | 48,874 | - | - | - |
| 2 | ஏறாவூர்பற்று | 73,182 | 20,186 | 71,111 | 313 | 1,539 | 171 | 48 |
| 3 | ஏறாவூர் நகரம் | 39,028 | 10,268 | 83 | 38,945 | - | - | - |
| 4 | மண்முனை தென் எருவில் பற்று | 62,520 | 18,185 | 62,503 | 3 | 14 | - | - |
| 5 | மண்முனை வடக்கு | 94,882 | 25,427 | 85,074 | 4,599 | 153 | 4,501 | 555 |
| 6 | கோறளைப்பற்று மேற்கு | 22,292 | 6,010 | 64 | 22,224 | 4 | - | - |
| 7 | கோறளைப்பற்று | 23,997 | 7,248 | 23,676 | 26 | 117 | 161 | 17 |
| 8 | மண்முனை மேற்கு | 30,857 | 8,732 | 30,853 | 4 | - | - | - |
| 9 | கோறளைப்பற்று வடக்கு | 24,285 | 7,171 | 23,147 | 1,025 | 111 | 2 | - |
| 10 | மண்முனைப்பற்று | 33,898 | 9,785 | 25,366 | 8,408 | 1 | 79 | 44 |
| 11 | மண்முனை தென்மேற்கு | 26,333 | 7,453 | 25,421 | - | 912 | - | - |
| 12 | போரதீவு பற்று | 43,579 | 12,455 | 43,290 | - | 289 | - | - |
| 13 | கோறளைப்பற்று தெற்கு | 31,028 | 8,001 | 31,018 | 10 | - | - | - |
| 14 | கோறளைப்பற்று மத்தி | 31,645 | 8,477 | 554 | 30,975 | 57 | 59 | - |
| | **மொத்தம்** | **586,400** | **162,742** | **422,160** | **155,406** | **3,197** | **4,973** | **664** |

மூலம் : புள்ளிவிபரப்பிரிவு, கச்சேரி, மட்டக்களப்பு




| கடந்த வருடத்துடனான ஒப்பீடு | | | |
|---|---|---|---|
| 2012 | 2013 | குறைவு | குறைவு வீதம் |
| 588,993 | 586,400 | 2,593 | 0.44 % |

## 3.8 மாவட்டத்தின் காலநிலை

நவம்பர் தொடக்கம் பெப்பிரவரி வரையான மாதங்களில் மாவட்டத்தில் மழைக்காலநிலை காணப்படுவதுடன், ஆண்டின் சராசரி மழைவீழ்ச்சி 1400 மில்லி மீற்றர் ஆகும். ஏனைய காலப்பகுதியல் வெப்ப காலநிலை நிலவுவதுடன் இக்காலப்பகுதியின் சராசரி வெப்பநிலை $32^{O}C$ ஆகக்காணப்படும்.

| 2013 இல் மாவட்டத்தில் பதிவாகிய மொத்த மழைவீழ்ச்சி | 1,973.7 மி.மீ. |
|---|---|

| கடந்த வருடத்துடனான ஒப்பீடு | | | |
|---|---|---|---|
| 2012 | 2013 | அதிகரிப்பு | அதிகரிப்பு வீதம் |
| 1,786.4 மி.மீ. | 1,973.7 மி.மீ. | 187.3 மி.மீ. | 10.48 % |

| 2013 இல் மாவட்டத்தில் நாளொன்றில் பதிவாகிய | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிகபட்ச மழைவீழ்சி | | அதிகபட்ச வெப்பநிலை | | ஆகக்குறைந்த வெப்பநிலை | |
| அளவு | பதிவாகிய திகதி | அளவு | பதிவாகிய திகதி | அளவு | பதிவாகிய திகதி |
| 229.2 மி.மீ | ஜனவரி 24 | $37.6^{O}C$ | ஆகஸ்ட் 03 | $21.5^{O}C$ | ஜனவரி 19 |

மூலம் (3.8) : வளிமண்டலவியல் திணைக்களம்,தலைமை அலுவலகம், கொழும்பு - 07

## 3.9 மாவட்டத்தின் புள்ளிவிபரத் தகவல்கள்

| மாவட்டத்தின் பெயர் | மட்டக்களப்பு |
|---|---|
| மாகாணம் | கிழக்கு மாகாணம் |

| பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர் பிரிவுகள், கிராமங்கள் மற்றும் பிரிவு ரீதியாக பரப்பளவு | | | | |
|---|---|---|---|---|
| இல | பிரதேச செயலகங்கள் | கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் | கிராமங்கள் | உள்ளக நீர்ப்பரப்பு உள்ளடங்கிய நிலப்பரப்பு (வர்க்க கி.மீ.) |
| 1 | காத்தான்குடி | 18 | 18 | 06 |
| 2 | ஏறாவூர்பற்று | 39 | 191 | 695 |
| 3 | ஏறாவூர் நகரம் | 15 | 54 | 03 |
| 4 | மண்முனை தென் எருவில் பற்று | 45 | 14 | 63 |
| 5 | மண்முனை வடக்கு | 48 | 124 | 68 |
| 6 | கோறளைப்பற்று மேற்கு | 8 | 29 | 17 |
| 7 | கோறளைப்பற்று | 12 | 28 | 35 |
| 8 | மண்முனை மேற்கு | 24 | 137 | 352 |
| 9 | கோறளைப்பற்று வடக்கு | 16 | 43 | 589 |
| 10 | மண்முனைப்பற்று | 27 | 50 | 37 |
| 11 | மண்முனை தென்மேற்கு | 24 | 91 | 145 |
| 12 | போரதீவு பற்று | 43 | 136 | 182 |
| 13 | கோறளைப்பற்று தெற்கு | 18 | 107 | 582 |
| 14 | கோறளைப்பற்று மத்தி | 9 | 14 | 80 |
| | மொத்தம் | 345 | 991 | 2854 |

| வாக்கெடுப்பு தொகுதி,பிரதேச செயலக ரீதியாக உள்ளுராட்சி சபைகளும் அவற்றினதும் மாகாண சபை, பாராளுமன்ற அங்கத்தவர்களும் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வாக்கெடுப்பு தொகுதிகள் | இல | பிரதேச செயலகங்கள் | உள்ளுராட்சிசபைகளும் அங்கத்தவர்களும் | | | | மாகாண சபை அங்கத் தவர்கள் | பாராளு மன்ற அங்கத் தவர்கள் |
| | | | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை | அங்கத் தவர்கள் | | |
| **01. கல்குடா** | 1 | கோறளைப்பற்று வடக்கு | - | - | 01 | 11 | 11 | 05 |
| | 2 | கோறளைப்பற்று மத்தி | - | - | 01 | 09 | | |
| | 3 | கோறளைப்பற்று மேற்கு | | | | | | |
| | 4 | கோறளைப்பற்று | - | - | 01 | 11 | | |
| | 5 | கோறளைப்பற்று தெற்கு | | | | | | |
| | 6 | ஏறாவூர்பற்று | - | - | 01 | 14 | | |
| **02. மட்டக்களப்பு** | 7 | ஏறாவூர் நகரம் | - | 01 | - | 09 | | |
| | 8 | மண்முனை வடக்கு | 01 | - | - | 19 | | |
| | 9 | மண்முனை மேற்கு | - | - | 01 | 09 | | |
| | 10 | காத்தான்குடி | - | 01 | - | 09 | | |
| | 11 | மண்முனைப்பற்று | - | - | 01 | 09 | | |
| **03. பட்டிருப்பு** | 12 | மண்முனை தென்மேற்கு | - | - | 01 | 09 | | |
| | 13 | போரதீவு பற்று | - | - | 01 | 09 | | |
| | 14 | மண்முனை தென் எருவில் பற்று | - | - | 01 | 10 | | |
| | | **மொத்தம்** | **01** | **02** | **09** | **128** | **11** | **05** |

| இல | தேர்தல் தொகுதிகள் | வாக்கெடுப்பு மாவட்டங்கள் | 2013ல் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் |
|---|---|---|---|
| **01** | கல்குடா | 97 | 102,970 |
| **02** | மட்டக்களப்பு | 165 | 169,494 |
| **03** | பட்டிருப்பு | 100 | 85,741 |
| | **மொத்தம்** | **362** | **358,205** |

மூலம் : மாவட்ட தேர்தல் அலுவலகம், மட்டக்களப்பு

| இல | கல்வி வலயங்கள் | 2013 உள்ளபடியான பாடசாலைகளின் எண்ணிக்கை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | தேசிய பாட-சாலை | தரம் 1AB பாடசாலை | தரம் 1C பாடசாலை | தரம் 2 பாடசாலை | தரம் 3 பாட-சாலை | |
| 1. | கல்குடா | - | 5 | 8 | 24 | 46 | **83** |
| 2. | மட்டக்களப்பு மத்தி | 5 | 1 | 15 | 15 | 34 | **70** |
| 3. | மட்டக்களப்பு | 4 | 4 | 12 | 23 | 20 | **63** |
| 4. | மட்டக்களப்பு மேற்கு | -- | 2 | 7 | 25 | 30 | **64** |
| 5. | பட்டிருப்பு | 1 | 4 | 13 | 24 | 25 | **67** |
| | மொத்தம் | **10** | **16** | **55** | **111** | **155** | **347** |

மூலம் : வலயக்கல்வி அலுவலகங்கள், மட்டக்களப்பு மாவட்டம்

| இல | கல்வி வலயங்கள் | 2013 இல் உள்ளபடியான ஆசிரியர்களின் எண்ணிக்கை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | தேசிய பாட-சாலை | தரம் 1AB பாடசாலை | தரம் 1C பாடசாலை | தரம் 2 பாடசாலை | தரம் 3 பாட-சாலை | |
| 1. | கல்குடா | - | 348 | 297 | 359 | 311 | **1,315** |
| 2. | மட்டக்களப்பு மத்தி | 326 | 72 | 497 | 350 | 237 | **1,482** |
| 3. | மட்டக்களப்பு | 388 | 218 | 391 | 355 | 153 | **1,505** |
| 4. | மட்டக்களப்பு மேற்கு | -- | 78 | 229 | 364 | 150 | **821** |
| 5. | பட்டிருப்பு | 98 | 159 | 379 | 385 | 121 | **1,142** |
| | **மொத்தம்** | **812** | **527** | **1,496** | **1,454** | **661** | **4,950** |

மூலம் : வலயக்கல்வி அலுவலகங்கள், மட்டக்களப்பு மாவட்டம்

| மாவட்டத்திலுள்ள அரச விடுதிகளின் எண்ணிக்கை | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதேச செயலகங்களின் கீழ் | | மாவட்டச் செயலகத்தின் கீழ் | | | அரச நிருவாக அமைச்சின் கீழ் | | |
| பதவி நிலை அலுவலர் | ஏனைய அலுவலர் | அரச அதிபர் இல்லம் | பதவி நிலை அலுவலர் | ஏனைய அலுவலர் | சுற்றுலா விடுதிகள் | ஏனை யவை | |
| **14** | **-** | **01** | **08** | **16** | **02** | **-** | **41** |

மூலம் : கச்சேரி, மட்டக்களப்பு

# 04 அமைப்பு மற்றும் ஆளனி

## 4.1 அமைப்பு வரைபடம்




## 4.2.1 அனுமதிக்கப்பட்ட ஆளனி – மாவட்ட செயலகம்

| வகை | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய அனுமதிக்கப்பட்ட ஆளனி | உள்ளபடியான ஆளனி | மேலதிகம் |
|---|---|---|---|
| சிரேஸ்ட மட்டம் | 07 | 07 | - |
| மூன்றாம் மட்டம் | 02 | 02 | - |
| இரண்டாம் மட்டம் | 57 | 61 | 04 |
| ஆரம்ப மட்டம் | 18 | 20 | 02 |
| **மொத்தம்** | **84** | **90** | **06** |

## 4.2.2 அனுமதிக்கப்பட்ட ஆளனி – பிரதேச செயலகங்கள்

| வகை | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய அனுமதிக்கப்பட்ட ஆளனி | உள்ளபடியான ஆளனி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஸ்ட மட்டம் | 42 | 33 | 09 |
| மூன்றாம் மட்டம் | 42 | 11 | 31 |
| இரண்டாம் மட்டம் | 846 | 754 | 92 |
| ஆரம்ப மட்டம் | 125 | 103 | 22 |
| மொத்தம் | **1055** | **901** | **154** |

மூலம் (4.2.1,4.2.2) : மாதாந்த சம்பளம் மற்றும் ஆளனிப்பட்டோலை அறிக்கை - 2013

# 05 செயல் நிறைவேற்றுகை

## 5.1 பொது நிருவாக செயற்பாட்டின் முன்னேற்றம்

### 5.1.1 நிருவாக செயற்பாடுகள்

- **இடமாற்றங்கள் (பதவிநிலை உத்தியோகத்தர்கள்)**

| | பெயரும் பதவியும் | புதிய நிலையம் | முன்னைய நிலையம் |
|---|---|---|---|
| 1. | திரு. கே. விமலநாதன் மேலதிக அரசாங்க அதிபர் | பிரதி தபால் மா அதிபர் பணிமனை, மட்டக்களப்பு | மாவட்ட செயலகம், மட்டக்களப்பு |
| 2. | திரு. எஸ். பாஸ்கரன் மேலதிக அரசாங்க அதிபர் | மாவட்ட செயலகம்,மட்டக்களப்பு | தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு |
| 3. | திருமதி. வீ. அருள்ராஜா பிரதேச செயலாளர் | பிரதி தபால் மா அதிபர் பணிமனை, மட்டக்களப்பு | பிரதேச செயலகம், மண்முனைப்பற்று |
| 4. | திருமதி. எஸ். ஸ்ரீகாந்த் உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், மண்முனை வடக்கு | பிரதேச செயலகம், மண்முனை தென்மேற்கு |
| 5. | திரு. எஸ். ராஜ்பாபு உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், மண்முனை மேற்கு | பிரதேச செயலகம், கோறளைப்பற்று |
| 6. | திரு. ஆர். திரவியராஜ் உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், நிந்தவூர் | பிரதேச செயலகம், போரதீவுப்பற்று |
| 7. | திரு. கே. ஜெகதீஸ்வரன் கணக்காளர் | பிரதேச செயலகம், மண்முனை மேற்கு | அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை |
| 8. | திருமதி. சீ. ஜெயந்திரா கணக்காளர் | பிராந்திய தபால் மா அதிபர் பணிமனை | பிரதேச செயலகம், கோறளைப்பற்று |
| 9. | திரு. ஏ.சீ. அகமட் அக்பர் உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், காத்தான்குடி | பிரதேச செயலகம், ஏறாவூர் நகரம் |
| 10. | திருமதி. எம்.ஏ.சீ. ரமீஸா உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், ஏறாவூர் நகரம் | பிரதேச செயலகம், காத்தான்குடி |

- **இடமாற்றங்கள் (ஏனைய உத்தியோகத்தர்கள்)**

| வெளியக (திணைக்களங்களுக்கிடையில்) | | | | உள்ளக (மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கிடையில்) | |
|---|---|---|---|---|---|
| இடமாற்றம் பெற்று வந்தவர்கள் | | இடமாற்றம் பெற்றுச்சென்றவர்கள் | | | |
| இரண்டாம் மட்டம் | ஆரம்ப மட்டம் | இரண்டாம் மட்டம் | ஆரம்ப மட்டம் | இரண்டாம் மட்டம் | ஆரம்ப மட்டம் |
| 04 | -- | 08 | -- | 22 | 15 |

- **பதவி மாற்றங்கள் (பதவிநிலை உத்தியோகத்தர்கள்)**

| | பெயரும் புதிய பதவியும் | புதிய நிலையம் | பழைய பதவியும் நிலையமும் |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.வாசுதேவன் பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், மண்முனைப்பற்று | உதவி மாவட்ட செயலாளர், கச்சேரி, மட்டக்களப்பு |
| 2. | திரு. எஸ். ரங்கநாதன் உதவி மாவட்ட செயலாளர் | மாவட்ட செயலகம், மட்டக்களப்பு | உதவி பிரதேச செயலாளர், ம.தெ.எ.ப. பிரதேச செயலகம் |
| 3. | திரு. ரி. தேவகாந்தன் பிரதம உள்ளகக்கணக்காய்வாளர் | மாவட்ட செயலகம், மட்டக்களப்பு | கணக்காளர், பிரதேச செயலகம், மண்முனை மேற்கு, வவுணதீவு |
| 4. | திரு. எம். ஜேசு ரெஜினோல்ட் பிரதம உள்ளகக்கணக்காய்வாளர் | மாவட்ட செயலகம், முல்லைத்தீவு | கணக்காளர், பிரதேச செயலகம், காத்தான்குடி |

- **பதவி மாற்றங்கள் (ஏனைய உத்தியோகத்தர்கள்)**

| பதவி மாற்றம் பெற்றுச் சென்றவர்கள் | |
|---|---|
| இரண்டாம் மட்டம் | ஆரம்ப மட்டம் |
| 03 | - |

- **புதிய நியமனங்கள் (பதவிநிலை உத்தியோகத்தர்கள்)**

| | பெயரும் புதிய பதவியும் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|---|
| 1 | செல்வி. எம்.எஸ். சில்மியா | உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம்,கோறளைப்பற்று மேற்கு |
| 2 | திருமதி. எல். பிரசாந்தன் | உதவிப்பிரதேச செயலாளர் | பிரதேச செயலகம், மண்முனைப்பற்று |

- **புதிய நியமனங்கள் (ஏனைய உத்தியோகத்தர்கள்)**

| இடைநிலை உத்தியோகத்தர்கள் | ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்கள் |
|---|---|
| 200 | - |

- **இளைப்பாறிய பதவிநிலை உத்தியோகத்தர்கள்**

| | பெயர் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ். வரதராஜன் | உதவிப்பிரதேச செயலாளர் | பி.செ. மண்முனை வடக்கு |
| 2. | திரு. எஸ். துரையப்பா | நிருவாக அலுலவர் | பி.செ. மண்முனைப்பற்று |
| 3. | திரு. ஆர்.பி. குரூஸ் | நிருவாக அலுவலர் (கி.உ.) | பி.செ. ஏறாவூர்ப்பற்று |
| 4. | திரு. பீ. ஸ்ரீஸ்கந்தராஜா | நிருவாக அலுவலர் (கி.உ.) | பி.செ. மண்முனை தென்மேற்கு |

- **இளைப்பாறிய ஏனைய உத்தியோகத்தர்கள்**

| இரண்டாம் மட்டம் | ஆரம்ப மட்டம் |
|---|---|
| 13 | 01 |

- **மரணமடைந்த உத்தியோகத்தர்கள்**

| | பெயரும் புதிய பதவியும் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|---|
| 1. | திரு. எம். சிவனேசராஜா | கணக்காளர் | பிரதேச செயலகம், போரதீவுப்பற்று |
| 2. | திரு. சீ. பத்மநாதன் | முகாமைத்துவ உதவியாளர் | மாவட்ட செயலகம், மட்டக்களப்பு |

## 5.1.2 கிராம உத்தியோகத்தர் செயற்பாடுகள்

| வகை | | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய அனுமதிக்கப்பட்ட ஆளணி | உள்ளபடியான ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| B | **கிராம உத்தியோகத்தர்கள் (நிருவாகம்)** | **14** | **04** | **10** |
| C | **கிராம உத்தியோகத்தர்கள்** | **345** | **243** | **102** |

மூலம் (5.1.1,5.1.2) – நிருவாக கிளை, கச்சேரி, மட்டக்களப்பு

## 5.1.3 உள்ளகக்கணக்காய்வு செயற்பாடுகள்

மாவட்டச்செயலகத்திற்கென பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களைக் கொண்ட உள்ளகக்கணக்காய்வு பிரிவு 2013 ஆம் ஆண்டில் தனி ஒரு அலகாக புதிதாக ஸ்தாபிக்கப்பட்டது. இப்பிரிவினால் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வருமாறு:

- வருடாந்த உள்ளக்கணக்காய்வுத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், அதன்படி உள்ளக்கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களை உள்ளடங்கியதாக 115 உள்ளக கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்குரிய பதில் அறிக்கைகளும் பெறப்பட்டு தவறுகள் நிவர்த்திசெய்யப்பட்டன.
- சுயவிபரக்கோவைகள் தனித்தனியாக பரிசீலிக்கப்பட்டு குறைபாடுகள் இனங்காணப் பட்டதுடன், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பட்டோலையும் வழங்கப்பட்டன.
- பாராளுமன்ற பொதுக்கணக்குக்குழுவின் அறிவுறுத்தல்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன.
- உள்ளகக்கணக்காய்வு காலாண்டு அறிக்கைள் உரிய வேளையில் தொடர்புடைய அலுவலஙகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
- 2013-2016 வருடத்தின் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஒன்றிணைந்த செயற்திட்டம் தயாரிப்பதில் கனிசமான பங்களிப்பு வழங்கப்பட்டது.
- பிரதேச செயலக பெறுகைக்குழு கூட்டங்களில் அவதானிப்பாளராகக் கலந்து கொள்வதன் மூலம் கணக்காய்வு ஐயவினாக்களை தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் 2013 மே 02, ஜுலை 05, அக்டோபர் 14 ஆகிய திகதிகளில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றதுடன், இதில் உள்ளகக் கணக்காய்வு விடயங்களும் பதிலளிக்கப்படாத பொதுக்கணக்காய்வு ஐயவினா விடயங்களும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளகக்கணக்காய்வு பிரிவின் செயற்பாடுகள் காரணமாக கணக்கீட்டு வழுக்கள் குறைவடைந்துள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டன.
- மாவட்டச்செயலகத்தின் கண்காணிப்பின் கீழ் பிரதேச செயலங்கள் தோறும் 02 பேர் வீதம் உள்ளகக்கணக்காய்வு உத்தியோகதர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் மாவட்ட உள்ளகக்கணக்காய்வு பிரிவுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். இவர்களுக்கான கணக்காய்வு நடவடிக்கை பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.
- உத்தியோகத்தர்களின் கவனயீனத்தவறுகளை குறைப்பதன் மூலம் கணக்கீட்டு வழுக் களை மட்டுப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் வினைத்திறனுட னான அரச வளப்பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக வளங்களின் சிக்கனப் பயன்பாட்டுப்பொறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 5.1.4 வருமான சேகரிப்பு செயற்பாடுகள்

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் 2013ம் ஆண்டில் ரூபா.70,722,354.81 சேகரிக்கப்பட்டது. இதன் முழுமையான விபரம் இணைப்பு – 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5.1.5 மனிதவள அபிவிருத்தி ஆளுமை விருத்தி செயற்பாடுகள்

- உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் ரூ. 54,750/- நிதி அனுசரணையின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட தேசிய உற்பத்தித்திறன் செயலகப்பிரிவினால் மாவட்ட அலுவலர் களின் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் 24.10.2013 திகதி மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் மாவட்டத்தின் பல்வேறு திணைக்களங்களைச்சேர்நத 205 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.
- 2012/13 ஆண்டுக்கான உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித்தொடரில் மாவட்டத்தின் 27 அரச தனியார் திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் பங்குபற்றினர்.
- பாடசாலைதுறை சார்ந்த 40 வளவாளர்களுக்கும், அரசதுறை சார்ந்த 20 வளவாளர்களுக்கும் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு உற்பத்தித்திறன் செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்துகை தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு மதிப்பிடப்பட்டது.

## 5.1.6 தேர்தல் செயற்பாடுகள்

2013 ஆண்டில் தேர்தல்கள் எதுவும் எமது மாவட்டத்தின் இடம்பெறவில்லை என்பதுடன், இவ்வருடத்தில் இடம்பெற்ற வட மாகாண சபைக்கான தேர்தல் கடமை களில் மாவட்டத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டதுடன் 30 அரச வாகனங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தன.

## 5.1.7 திருமண, பிறப்பு, இறப்பு பதிவுகள் செயற்பாடுகள்

| தொ. இல. | பிரதேச செயலக பிரிவுகள் | பொது விவாகம் | முஸ்லீம் விவாகம் | பிறப்பு | இறப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | காத்தான்குடி | - | 362 | 24 | 98 |
| 2 | ஏறாவூர்பற்று | 767 | - | 535 | 293 |
| 3 | ஏறாவூர் நகரம் | - | 488 | 370 | 107 |
| 4 | மண்முனை தென் எருவில்பற்று | 229 | - | 578 | 227 |
| 5 | மண்முனை வடக்கு | 651 | 61 | 7104 | 929 |
| 6 | கோறளைப்பற்று மேற்கு | - | 372 | 1555 | 210 |
| 7 | கோறளைப்பற்று | 290 | 35 | 50 | 96 |
| 8 | மண்முனை மேற்கு | 208 | - | 50 | 96 |
| 9 | கோறளைப்பற்று வடக்கு | 105 | - | 347 | 88 |
| 10 | மண்முனைப்பற்று | 247 | 65 | 56 | 135 |
| 11 | மண்முனை தென்மேற்கு | 324 | - | 134 | 84 |
| 12 | போரதீவு பற்று | 372 | - | 74 | 122 |
| 13 | கோறளைப்பற்று தெற்கு | 221 | - | 73 | 81 |
| 14 | கோறளைப்பற்று மத்தி | - | - | - | - |
| | **மொத்தம்** | **3,414** | **1,383** | **1,0950** | **2,566** |

மூலம் : பிரதேச செயலக பதிவாளர்கள், மட்டக்களப்பு

## 5.1.8 காணிப்பதிவு செயற்பாடுகள்

ஆவணங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் மாவட்ட காணிப்பதிவகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்படி 2013 ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை மற்றும் இதன் மூலம் பெறப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக விபரங்கள் கீழ்வருமாறு

| விபரம் | எண்ணக்கை | பெறப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| ஆவணங்கள் பதிவு செய்தல் | 18,725 | 69,891.50 |
| காணிப்பதிவேட்டுத்தாள் விண்ணப்பம் | 10,024 | 2,069,000.00 |
| உறுதிப்பிரதி விண்ணப்பங்கள் | 3,831 | 2,533,500.00 |
| விவாக பிறப்பு இறப்பு சான்றிதழ் விண்ணப்பம் | 26 | 7,300.00 |
| விவாக பிறப்பு இறப்பு சான்றிதழ் மொழிபெயர்ப்பு விண்ணப்பங்கள் | 24 | 15,500.00 |
| இணைப்பிரதி மூலம் முத்திரை வரி | 15,468 | 265,109,425.00 |
| நொத்தாரிசுமாரிடமிருந்து அறவிடப்பட்ட தண்டப்பணம் | - | 445,656.00 |
| முத்திரை வரிச்சட்டத்தின் கீழான நிலுவைகள் | - | 197,410.00 |
| முத்திரை வரிச்சட்டத்தின் கீழான தண்ணப்பணம் | - | 49,392.50 |
| **மொத்தம்** | **48,098** | **270,497,075.00** |

மூலம் : மாவட்ட காணிப்பதிவகம், கச்சேரி, மட்டக்களப்பு

### 5.1.9 அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்

கடந்த வருடத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கை என்பன தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் புள்ளிவிபர அறிக்கை வருமாறு.

| | | |
|---|---|---|
| **பாதிக்கப்பட்டவர்களின் விபரம்** | **குடும்பங்கள்** | 100,482 |
| | அங்கத்தவர்கள் | 352,992 |
| வீட்டுடமை பாதிப்புக்கள் | முழுமையான | 1,270 |
| | பகுதியளவான | 1,263 |

| **வழங்கப்பட்ட அனர்த்த நிவாரணம் தொடர்பான விபரங்கள்** | | |
|---|---|---|
| **விபரம்** | நிவாரணம் பெற்றவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிவாரணத் தொகை |
| **சமைத்த உணவு வழங்கல்** | 15,813 | 5,582,765.00 |
| **உலர் உணவு வழங்கல்** | 47,401 | 19,371,301.08 |
| **குடிநீர் வழங்கல்** | 35,655 | 1,343,874.93 |
| **மரண இழப்பீட்டுக்கொடுப்பனவு** | 08 | 120,000.00 |
| **படகு சேவை** | - | 123,150.00 |
| **ஏனைய செலவினங்கள்** | - | 545,070.26 |
| **நிருவாக செலவினங்கள்** | - | 370,890.05 |
| **மொத்தச்செலவினங்கள்** | - | 27,966,630.24 |

## 5.2 சமூக சேவை மற்றும் கலாசார செயற்பாட்டு முன்னேற்றம்

### 5.2.1 கலாசார மற்றும் சமயம் சார் செயற்பாடுகள்

- தேசிய உணவு கலாசார மேம்பாட்டுத்திட்ட நிகழ்வு கடந்த 20.06.2013 இல் கலாசார அலுவலக திணைக்களத்தின் ரூ. 50,000.00 நிதிப்பங்களிப்புடன் நடைபெற்றது.
- 2013 ஆம் ஆண்டின் கலை நிறுவனங்களுக்கான நடனப்போட்டி 26.09.2013 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ரூ. 40,000.00 நிதிப்பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது.
- மாவட்ட இலக்கிய விழா கடந்த 12.11.2013 இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச வங்கிகளின் ரூ. 100,000.00 நிதிப்பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

### 5.2.2 சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகள்

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தின் ரூ. 115,000/- நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் மாவட்ட மட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்திச்செயற்பாடுகள் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

- முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு 26.08.2013 மாவட்ட செயலகத்திலும், 03.09.2013 ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திலும் நடைபெற்றன.
- முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் 05.09.2013 கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திலும், 17.09.2013 திகதி பட்டிப்பளை கலாசார மண்டபத்திலும் நடைபெற்றன.
- தேசிய முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி வார நிகழ்வுகள் மாவட்டச்செயலகத்தின் ஏற்பாட்டில் 17.12.2013 திகதி மகாத்மா காந்தி பூங்காவில் நடைபெற்றது.

## 5.2.3 சமூக சேவை செயற்பாடுகள்

- சமூக சேவைகள் அமைச்சினால் CBR திட்டத்தின் கீழ் ரூ. 150,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பிரதேச மட்டங்களில் சுய உதவிக்குழு, பெற்றோர் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் அங்கவீனர்களுக்கென மலசலகூட வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.
- சமூக சேவை அமைச்சின் தயட்ட கிருள வேலைத்திட்டத்தின் கீழ் அங்கவீனர்களுக்கென 20 மலசல கூட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கும் பொருட்டு ரூ. 400,000/- வழங்கப் பட்டது.

## 5.2.4 மாவட்ட தொழில் சேவை நிலைய செயற்பாடுகள்

